**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனி.**

**முன்னிலை: சு. அபூர்வா, பி.ஏ., எல்.எல்.பி.,**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி, பழனி.**

**2026–ஆம் ஆண்டு ஜூலை மாதம் 29–ஆம் நாள் புதன்கிழமை**

**அ.வ.எண்.147/2025**

**(CNR No.TNDG08-000200-2025)**

N. துரைசாமி ....வாதி

/எதிர்/

K. துரைசாமி ....பிரதிவாதி

இந்த வழக்கானது கடந்த 21.11.2025–ஆம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு, என் முன்பாக கடந்த 20.07.2026–ஆம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, வாதி தரப்பில் வழக்கறிஞர் **திருமதி.G.சபிதா,** அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதி அழைத்தும் ஆஜராகவில்லை என்பதால், தோன்றாத் தரப்பினராக கருதப்பட்டு, ஒருதலைப்பட்சப்படுத்தப்பட்டும், வாதி தரப்பு வாதம் கேட்கப்பட்டும், வாதி தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

**<u>தீர்ப்புரை</u>**

வாதிக்கு, பிரதிவாதி பிராதுப்படி ரூ.96,950/–ம் அசல் ரூ.75,000/–க்கு பிராது தேதியான 14.11.2025–ம் தேதி முதல் தொகை வசூலாகும் வரை மாதம் 1–க்கு ரூ.100/–க்கு ரூ.1.00 வீதம் பின் வட்டியுடன் சேர்த்து செலுத்தி வைக்கக் கோரி வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.



APOORVA S
Digitally signed by APOORVA S
Date: 2026.07.29 17:30:12 +0530

<u>2. வாதி தரப்பு வழக்குரையின் சுருக்கம் :</u>

2.1. வாதியிடம், பிரதிவாதி கடந்த 05.06.2023—ம் தேதி தனது குடும்ப செலவிற்காகவும், சில்லரை கடன்கள் தீர்ப்பதற்காகவும் மற்றும் வியாபார செலவிற்காகவும் ரூ.75,000/— (ரூபாய் எழுபத்தி ஐந்தாயிரம் மட்டும்) கடனாக ரொக்கம் பெற்றுக்கொண்டு மேற்படி தொகைக்கு மாதம் 1—க்கு ரூ.100/—க்கு வீதம் வட்டி சேர்த்து கூடிய வட்டியும், அசலும் வாதி வேண்டும் போது வாதியிடமாவது அல்லது வாதியின் உத்தரவு பெற்றவர்களிடமாவது ரொக்கம் செலுத்தி வைப்பதாய் கண்டு மேற்படி தேதியில் வாதியின் வீட்டில் வைத்து எழுதி சாட்சியும் முன்னிலையில் வாதியின் பெயருக்கு ஒரு பிராமிசரி நோட்டு எழுதிக் கொடுத்து இருக்கிறார் என்றும், மேற்படி பிராமிசரி நோட்டுக்கு பிரதிவாதி, வாதியிடம் எந்தவிதமான அசலோ மற்றும் வட்டியோ செலுத்தவில்லை என்றும் கூறப்பட்டுள்ளது.

2.2. மேற்படி தாவா பிராமிசரி நோட்டுக்குரிய அசல் மற்றும் வட்டி தொகையை செலுத்தி வைக்கும்படி வாதி, பிரதிவாதியை பலமுறை நேரிலும் கடந்த 17.06.2025—ம் தேதி வழக்கறிஞர் அறிவிப்பு மூலமும் துயர்ந்ததில், மேற்படி அறிவிப்பை பிரதிவாதி கடந்த 23.06.2025—ம் தேதியன்று பெற்றுக்கொண்டு, மேற்படி அறிவிப்பிற்கு எவ்வித பதில் அறிவிப்பும் அனுப்பவில்லை என்றும், மேற்படி அறிவிப்பிற்கு பின்னரும் தாவா பிராமிசரி நோட்டுக்குரிய தொகையை செலுத்தி வைக்கவும் முன்வரவில்லை என்றும் வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. பிரதிவாதிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டும், உரிய வாய்ப்புகள் வழங்கப்பட்டும், பிரதிவாதி நீதிமன்றத்தில் முன்னிலையாகாத காரணத்தினால்



APOORVA S Digitally signed by APOORVA S
Date: 2026.07.29 17:30:19 +0530

பிரதிவாதி தோன்றாத் தரப்பினராக கருதப்பட்டு, ஒருதலைப்பட்சப்படுத்தப்பட்டுள்ளார்.

**4. இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவென்றால்,**

வாதிக்கு தாவா தொகையான ரூ.96,950/-ம் பிராமிசரி நோட்டின் அசல் தொகை ரூ.75,000/-க்கு பிராது தேதி முதல் மாதம் 1-க்கு ரூ.100/-க்கு ரூ.1.00 வீதம் பின் வட்டியுடன் பிரதிவாதி செலுத்தி வைக்கும் படி உத்தரவிட கோரும் பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா ? இல்லையா? என்பதே ஆகும்.

**5. சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் :**

இவ்வழக்கில், வாதி N.துரைச்சாமி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் மூலமாக வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. வாதி தரப்பில் கூடுதல் சாட்சியாக யாரும் விசாரிக்கப்படவில்லை. அத்துடன் வாதி தரப்பில் சாட்சியம் முடிக்கப்பட்டுள்ளது.

**6. வாதி தரப்பு வாதுரை :**

வாதி தரப்பில், பிரதிவாதி கடந்த 05.06.2023-ம் தேதி ரூ.75,000/- கடனாக ரொக்கம் பெற்றுக்கொண்டு தாவா கடனுறுதிச்சீட்டு எழுதிக் கொடுத்துள்ளார் என்றும், தாவா பிராமிசரி நோட்டுக்குரிய அசல் மற்றும் வட்டி தொகையை செலுத்தி வைக்கும்படி வாதி, பிரதிவாதியை பலமுறை நேரிலும் கேட்டும் பிரதிவாதி தாவா தொகையை செலுத்தி வைக்க முன்வரவில்லை என்று வாதிடப்பட்டது.

**7. தீர்வு:**



APOORVA S
Digitally signed by APOORVA S
Date: 2026.07.29 17:30:25 +0530

7.1. வாதிக்கு, பிரதிவாதி பிராதுப்படி ரூ.96,950/–ம் அசல் ரூ.75,000/–க்கு பிராது தேதியான 14.11.2025–ம் தேதி முதல் தொகை வசூலாகும் வரை மாதம் 1–க்கு ரூ.100/–க்கு ரூ.1.00 வீதம் பின் வட்டியுடன் சேர்த்து செலுத்தி வைக்கக் கோரி வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வாதி தரப்பு வாதம் கேட்கப்பட்டது. வாதி தரப்பு சாட்சியங்களும், சான்றாவணங்களும் கவனமாக பரிசீலனை செய்யப்பட்டன. வாதி தரப்பில் விசாரிக்கப்பட்ட வா.சா.1 பிராதை தழுவி சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி சாட்சியத்தை உறுதிப்படுத்த வாதி தரப்பில் குறியீடு செய்யப்பட்ட வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3 வரையிலான ஆவணங்களை கவனமாக பரிசீலனை செய்ததில் வா.சா.ஆ.1 ஆனது கடந்த 05.06.2023–ம் வாதிக்கு பிரதிவாதி கொடுத்த கடனுறுதிச்சீட்டு ஆகும். வா.சா.ஆ.2 ஆனது கடந்த 17.06.2025–ம் வாதி பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு ஆகும். வா.சா.ஆ.3 ஆனது கடந்த 23.06.2025–ம் மேற்படி அறிவிப்பை பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டை ஆகும்.

7.2. வாதி தரப்பில், முன்னிலைப்படுத்தப்பட்ட சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் ஆகியவற்றை பரிசீலனை செய்ததில் வாதியிடம், பிரதிவாதி கடந்த 05.06.2023–ம் ஆம் தேதியன்று கடனாக ரூ.75,000/– ரொக்கம் பெற்றுக்கொண்டு, அதற்கு மாதம் 1–க்கு ரூ.100/–க்கு வட்டி ரூ.1.00 வீதம் சேர்த்து வட்டியும் முதலும் செலுத்துவதாக ஒப்புக்கொண்டு தாவா பிராமிசரி நோட்டை எழுதி கையொப்பமிட்டு வாதியிடம் கொடுத்துள்ளார் என்பதை அறிய முடிகிறது. தாவா பிராமிசரி நோட்டுக்குரிய அசல் மற்றும் வட்டி தொகைகளை செலுத்தி வைக்கும்படி கேட்டு வாதி தனது வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிக்கு ஒரு அறிவிப்பு அனுப்பியுள்ளார் என்பதை வா.சா.ஆ.2 மூலமாகவும், அந்த அறிவிப்பை பிரதிவாதி கடந்த 23.06.2025–ம் தேதி பெற்றுக்கொண்டுள்ளார் என்பதை வா.சா.ஆ.3 மூலமாகவும் அறிய முடிகிறது.



APOORVA S Digitally signed by APOORVA S Date: 2026.07.29 17:30:32 +0530

7.3. வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3 வரையிலான சான்றவாணங்களின் மூலமும் வா.சா.1–ன் சாட்சியத்தின் மூலமும் வாதி தரப்பு வழக்கு நிரூபிக்கப்பட்டுள்ளது. வாதியின் வழக்கை மறுத்துரைக்க பிரதிவாதி ஆஜராகி எதிர் வழக்குரை தாக்கல் செய்யவோ, வாதியின் வழக்கை மறுத்து சாட்சிய, சான்றாவணங்களை முன்னிலைப்படுத்தவோ இல்லை மாறாக தோன்றாத் தரப்பினர்களாக கருதப்பட்டு ஒருதலைபட்சப்படுத்தப்பட்டுள்ளார்கள். மேலும், வாதி தனது தரப்பு வாய்மொழி சாட்சியங்கள் மற்றும் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3 வரையிலான ஆவணங்கள் மூலம் வாதியின் வழக்கை நிரூபணம் செய்துள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே, தாவா தொகை ரூ.96,950/–ம், அசல் தொகை ரூ.75,000/– க்கு பின்வட்டி மற்றும் தாவா செலவு தொகையை வாதிக்கு, பிரதிவாதி செலுத்திவைக்க கடமைப்பட்டுள்ளார் என்று இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**8. இறுதியாக**, வாதிக்கு, பிரதிவாதி தாவா தொகை ரூ.96,950/–, அசல் தொகை ரூ.75,000/–க்கு தாவா தேதி முதல் தீர்ப்பாணை தேதி வரை ஆண்டொன்றுக்கு 9% வட்டியும், தீர்ப்பாணை தேதியிலிருந்து தொகை முழுவதும் வசூலாகும் தேதி வரை ஆண்டொன்றுக்கு 6% பின் வட்டியுடன் தாவா செலவு தொகையையும் சேர்த்து செலுத்தி வைக்க வேண்டுமென்று தீர்ப்பளிக்கப்படுகிறது.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து–தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பிழை திருத்தம் செய்யப்பட்டு, 2026 ஆம் வருடம் ஜூலை மாதம் 29 ஆம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.



APOORVA S
Digitally signed by APOORVA S
Date: 2026.07.29 17:30:38 +0530

APOORVA S Digitally signed by APOORVA S Date: 2026.07.29 17:31:16 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**பழனி.**

**வாதி தரப்பு சாட்சிகள் :–**

வா.சா.1 – திரு.N.துரைச்சாமி

**வாதி தரப்பு சான்றாவணங்கள் :–**

| **வ.எண்.** | **தேதி** | **விபரம்** | **தன்மை** |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1 | 05.06.2023 | வாதிக்கு பிரதிவாதி கொடுத்த கடனுறுதிச்சீட்டு. | அசல் |
| வா.சா.ஆ.2 | 17.06.2025 | வாதி பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு. | அசல் |
| வா.சா.ஆ.3 | 23.06.2025 | மேற்படி அறிவிப்பை பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை. | அசல் |

**பிரதிவாதி தரப்பு சாட்சியம் : இல்லை.**

**பிரதிவாதி தரப்பு சான்றாவணங்கள் : இல்லை.**

APOORVA S Digitally signed by APOORVA S Date: 2026.07.29 17:31:27 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**பழனி.**